2013 மார்ச் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான்கு மாதங்களாக அவர் சம்பளம் வாங்கவில்லையென்று தெளிவாக* individual–*லே சொல்லிவிட்டார், அது குறித்துப் பேச வேண்டியதில்லை. நான்கு மாதங்கள் அறை பூட்டியிருந்ததையும், சீல் வைத்திருந்ததையும், சம்பளம் கொடுக்கவில்லையென்பதையும், அவர் சட்டமன்ற உறுப்பினராகச் செயல்படவில்லையென்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் சொல்லிவிட்டார். திரும்பவும் அதுகுறித்துப் பேசவேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்க நடைபெற்ற ஒரு தவறுக்காக, ஒழுங்கீனமான நடவடிக்கைக்காக தாங்கள் நேற்று சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓராண்டுக் காலம் வரை நீடிக்கக்கூடிய ஒரு தண்டனையை வழங்கியிருக்கிறீர்கள். இன்று எதிர்க்கட்சிகளைச் சார்ந்த பல மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தத் தண்டனைக் காலத்தைக் குறைக்க வேண்டுமென்று வைத்த கோரிக்கைக்கிணங்க, தாங்கள் "ஓர் ஆண்டு என்பதை ஆறு மாதங்கள் என்று குறைத்துக்கொள்ளலாம்" என்று தங்களுக்குப் பரிந்துரை செய்கிறேன்.*

4. அரசினர் தீர்மானம்

தே.மு.தி.க. உறுப்பினர்கள் ஆறு பேருக்கு வழங்கப்பட்ட தண்டனையைக் குறைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எதிர்க்கட்சிகளுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து, தவறு செய்பவர்களை மன்னிக்கும் விசால இதயம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)*

"கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்"

என்ற குறளுக்கேற்ப பலமுறை தவறு செய்தவர்களும் திருந்துவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் தே.மு.தி.க. கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையை ஆறு மாதங்களாகக் குறைக்குமாறு கூறியுள்ளார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தினை முன்மொழிவார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

[2013 மார்ச் 26

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நீங்கள் கொஞ்சம் அவசரப்படாமல் நிதானமாக இருங்கள். உட்காருங்கள். தீர்மானம் கொண்டுவரப் போகிறோம். (குறுக்கீடு) ஜனநாயக மாண்புகளை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எவ்வாறு மதிக்கிறார்கள் என்பதை அவர் விளக்கமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதற்குள் ஏன் நீங்கள் அவசரப்படுகிறீர்கள்? ஒரு சின்ன உதாரணத்தை மட்டும் சொல்கிறேன், கேளுங்கள். சட்டமன்றத்தினுடைய நடைமுறை, மாண்பு, விதி எங்களுக்கும் தெரியும் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 8–2–2013 அன்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நேரடியாக, கண்கூடாகப் பார்த்து, அவர்களால் அன்றைக்குத் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு அந்தச் சம்பவம் நடந்தது. ஆனால், மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியான, உங்களுடைய ஆட்சிக் காலத்தில், சில பிரச்சினைகள் ஏற்பட்டபோது ஒரு காவலருடைய தொப்பி அதுவாகவே நழுவி கீழே விழுந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள் மனிதப் பண்போடு அன்றையதினம் அதை எடுத்து அப்போதைய சட்டமன்றப்பேரவைத் தலைவருடைய மேஜையில் வைத்தார். இதை ஒரு பெரிய குற்றமாக நீங்கள் கருதி, உடனடியாக, அன்றைக்கே, அப்போதே 10 நாட்கள் பேரவைப் பணிகளிலிருந்து நீக்க வைக்கிறோம் என்று நீங்கள் தீர்ப்பு சொன்னது, சரியாக அடுத்த சட்டமன்றக் கூட்டம் தொடங்கி, 10 நாட்கள் இருக்கும்வரை அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டு, அந்தச் சட்டமன்ற உறுப்பினர் தங்கும் அறையும் சீல் வைத்துப் பூட்டப்பட்டது. நான்கு மாதங்கள் வரை அவர் சம்பளம் வாங்கவில்லை. சட்டமன்ற உறுப்பினருக்குரிய ஆதாயத்தையும் அவர் பெறவில்லை. இதுதான் உண்மை நிலை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் வழங்கியதுபோல அன்றைக்கே மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள்

2013 மார்ச் 26] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

உடனடியாக அவராகவே தீர்ப்பை வழங்கியிருக்கலாம். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் ஜனநாயகத்தை எந்த அளவுக்கு மதித்து நடந்து கொண்டிருக்கிறோம் என்பதற்கு இதுதான் சிறந்த உதாரணம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–50

அன்றைக்கு அவையில் நடந்த நிகழ்வை, பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி, தீர விசாரித்து, அவை உரிமைக் குழு தருகின்ற பரிந்துரைகளை இங்கே அறிக்கையாக சட்டமன்றத்தில் வைத்து, அதற்குப் பின்னாலே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தெரிந்து, அறிந்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பெருந்தன்மையை இனிமேலாவது புரிந்துகொள்ளவேண்டும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“தவறு செய்பவர்களை மன்னிக்கும் மாண்பும், கருணை உள்ளமும் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இவ்வுறுப்பினர்களுக்கு நேற்று வழங்கப்பட்ட தண்டனையை ஆறு மாத காலமாகக் குறைக்கவேண்டும் என்று பெருந்தன்மையுடன் தெரிவித்த கருத்திற்கிணங்க (மேசையைத் தட்டும் ஒலி) தே.மு.தி.க. கட்சியைச் சேர்ந்த திரு. வி.சி. சந்திரகுமார், திரு. ப. பார்த்தசாரதி, திரு. து. முருகேசன், திரு. கு. நல்லதம்பி, திரு. ஆர். அருள்செல்வன், திரு. எஸ். செந்தில்குமார் ஆகிய உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் ஊதியத்தையும், எந்தவிதமான பிற ஆதாயங்களையும், சலுகைகளையும், தகுதிகளையும் பெற இயலாதவகையில் ஆறு மாத காலம் அவை நடவடிக்கையிலிருந்து நீக்கம் செய்யப்படலாம்” என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

தே.மு.தி.க. கட்சியைச் சேர்ந்த திரு. வி.சி. சந்திரகுமார், திரு. ப. பார்த்தசாரதி, திரு. து. முருகேசன், திரு. கு. நல்லதம்பி, திரு. ஆர். அருள்செல்வன், திரு. எஸ். செந்தில்குமார் ஆகிய உறுப்பினர்கள் பேரவை நடவடிக்கைகளிலிருந்து ஆறு மாத காலம் நீக்கி வைக்கப்படுகிறார்கள். இக்காலத்தில் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் வழங்கப்படுகிற ஊதியம், எந்தவிதமான பிற ஆதாயங்களையும், சலுகைகளையும், தகுதிகளையும் பெற இயலாது என ஆணையிடுகிறேன்.

5. வரவு—செலவுத் திட்டம், 2013–2014, பொது விவாதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2013–2014 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். முதலிலே மாண்புமிகு திரு. ஆர். மனோகரன் அவர்கள், அரசு தலைமைக் கொறடா.

***திரு. ஆர். மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பச்சை மாமலை போல் மேனி,
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே,
ஆயர் தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்,
அரங்கமா நகருளானே"

என திருவரங்கத்தில் பள்ளிகொண்ட பெருமானைத் தொண்டரடிப்பொடி ஆழ்வார் போற்றிப் பாடினார். அப்புனிதத் திருவரங்கம் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி)